வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூலை - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, July - 2019

FWC

| தரம் :- 12 (2020) | இந்து சமயம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 6) 5 | 11) 4 | 16) 2 | 21) 3 |
| 2) 3 | 7) 5 | 12) 1 | 17) 3 | 22) 1 |
| 3) 4 | 8) 2 | 13) 5 | 18) 5 | 23) 3 |
| 4) 4 | 9) 4 | 14) 3 | 19) 1 | 24) 1 |
| 5) 1 | 10) 4 | 15) 4 | 20) 4 | 25) 5 |

(25 x 2 = 50 புள்ளிகள்)

## பகுதி II
### பகுதி "அ"

01. **சிந்துவெளிக்கால சமயநிலை**

1)
- சிந்துவெளிப் பிரதேச புதைபொருட்கள் இந்து சமயச் சார்புடையனவாகவே உள்ளன
- சிவனை அக்கால மக்கள் முக்கிய தெய்வமாக வழிபட்டனர்
- முத்திரைகள், இலிங்க வடிவங்கள் என்பன அக்கால சிவ வழிபாட்டை அறிய உதவுகின்றன.
- தற்கால சக்தி வழிபாட்டுடன் சிந்து வெளி மக்களிடையே நிலவிய தரைப் பெண் வழிபாடு அமைகின்றது.
- சுடுமண் தாயத்தொன்றில் முக்காலி ஒன்றின்மேல் பாற்கிண்ணம் காணப்படுகிறது. அருகில் பாம்ப தனது படத்தை விரித்தபடி உள்ளது இது நாகவழிபாட்டை வெளிப்படுத்துகின்றது
- சூரிய வழிபாட்டுடன் தொடர்புடைய ஆதாரங்களும் காணப்பட்டன.
- நிவேதன வழிபாட்டினை வெளிப்படுத்தும் ஆதாரங்களையும் காணப்பட்டன.
- முத்திரை ஒன்றில் பெண்கள் படைக்கும் தட்டுக்களை ஏந்தியவாறு காணப்படும் காட்லி தெய்வங்களுக்கு பூசைப்பொருட்களை நிவேதனமாகப் படைத்து வழிபட்டனர் என்பதற்கான சான்றுகள்
- பசுவதி வழிபாடு காணப்பட்டது சான்றாகும்
- கூம்புருவக்கற்கள் சிவலிங்கவழிபாட்டிற்கு சான்றாகும். (4 புள்ளிகள்)

**நுண்கலைகள்**

2)
- மொஹந்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் காணப்பட்ட கட்டங்கள் அக்கால கட்டக்கலையின் வளர்ச்சியை அறிவதற்கு உதவுகின்றன.
- மாளிகை போன்ற கட்டிட அமைப்புக்கள், களஞ்சிய அறை, நீராடுகின்ற குளம், மாடிவீடு, வீடுகள் என்று பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கட்டடம் ஒன்று 242 அடிநீளமும் 112 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.
- மழைநீருக்குத் தாக்குப்பிடிக்கும் வண்ணம் வெளிப்புறச் சுவர்களுக்கு தட்ட செங்கற்களை பயன்படுத்தியுள்ளனர்.
- உட்புறச்சுவர்களுக்கு அதன் பாரத்தைத் தாங்கும் வகையில் நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- அடுக்கு மாடி வீடுகளுக்குஅதன் பாரத்தைத் தாங்கும் வகையில் நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு சிற்ப வடிவங்களும் அக்கால சிற்பக்கலை வளர்ச்சியமைப்பை காட்டுகின்றன.

agaram.lk

- முத்திரைகளில் ெறிக்கப்பட்டுள்ள மிருதங்கம், தவில் போன்ற சான்றுகள் அக்கால இசைக்கலை பற்றி அறிய உதவுவன
- இங்கு கிடைக்கப்பபெற்ற மட்பாண்டங்கள் மீது பாம்பு, மீன்கள், வட்டங்கள், சதுரங்கள், இலைகள் என்று பல உருவங்கள் ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன.
- சிந்துவெளிப்பிரதேசத்தில் வெளிப்படுத்தப்பட்ட சிற்பங்களுள் வெண்கலத்தனாலான நடனமாதின் வடிவம், ஆடவர்வடிவங்கள் போன்றவற்றைக் கூறலாம் (03 புள்ளிகள்)

<u>வாழ்க்கை முறை</u>

3) • சிந்துவெளிப் பிரதேச மக்கள் நாகரிகம் உடைய வாழ்க்கையை வாழ்ந்தமைக்கு அப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபொருட் சின்னங்களே சான்றாக அமையும்

- விவசாயத் தொழில் காணப்பட்டதுக்கு சான்றாக கலப்பைகள் எமுதின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- மக்கள் முக்கிய தொழிலாக கப்பல்கட்டுதல், தச்சுதொழில்,சிற்பத்தொழில், கைவினைத் தொழில் என்பன போன்ற தொழில்களிலும் அம்மக்கள் ஈடுபடடனர்
- இறந்தவர்கள் புதைக்கப்பட்டனர்
- இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மதகுருவின் ஆடையில் பூவேலைப்பாட்டுடன் கூடிய சித்திரத்தைக் காணமுடியும்
- ஆண்கள் மேலாடைகளை அணியும் அறவிற்கு அக்கால மக்கள் நாகரிகமுடையவர்களாக பாதுகாப்பன சுற்றாடலையும் உடைய நாகரிக வாழ்வையும் பின்பற்றினர். நெருக்கமான வீட்டு அமைப்பால் ஒருமைப்பாடான சமூக அமைப்பு வெளிக்காட்டப்படுகிறது.

(03 புள்ளிகள்)

02.

1) **<u>வேதங்களின் வகையும் அமைப்பு முறையும்:</u>**

- வேதங்கள் நூல்வேதம் அவை சதுர்மறை,சதுர்மறை சதுர்வேதம் எனவும் அழைக்கப்படன
- ஆரம்பத்தில் வேதங்கள் திரைய் வித்தியா என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு,யசூர்,சாமம் என்பனவாகும். பின்னர் வழக்கில் இருக்கும் அதர்வவேதமும் இணைக்கப்பட்டு நான்காகக் கூறப்பட்டன.
- யசூர்வேதம்,செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்த மந்திரங்களை கொண்டுள்ளது
- சாமம் என்பது இசைப்பாடல்களைக் கொண்டது
- 101 கரணங்களைக் கொண்ட யசூர் வேதம் கிருஷ்ண யசூர், சுக்கில யசூர்எனும் இருபிரிவுகளை கொண்டது.
- இருக்கு வேதம் 10 மண்டலங்களையும்1028.ஆத்தங்களையும் கொண்டுள்ளது
- சாமவேதம் 1875 பாடல்களைக் கொண்டுள்ளதுடன் ஆர்ச்சிகம், உத்தர ஆர்ச்சிகம் எனும் பிரிவுகளை கொண்டுள்ளது
- அதர்வவேதம் 20காண்டங்களையும் 731 சூத்தங்களையும் 6000பாடல்களையும் கொண்டுள்ளது.
- நான்கு வேதங்களும் நான்கு பகுதிகளையும் மூன்று காண்டங்களையும் உடையது.
- சங்கிரை, பிராமணியம், ஆரணியம், உபநிடதம், எனும் நான்கு பகுதிகளை கொண்டுள்ளது.
- ஆரணியங்கள், யாகங்கள் மறைபொருளாய் உணர்த்தும் உண்மைகளையும் யாகம் எவற்றை யெல்லாம் குறிக்கின்றது என்பதையும் விளக்கிக் கூறும் நூல் ஆகும்
- சங்கதை பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்டம் பகுதியைச் சார்ந்தவையாகும்
- வேதங்களில் முதலில் வைத்து எண்ணப்படுவது இருக்கு வேதம் இருக்கு என்பது பாட்டு எனப் பொள்படும்.
- பிராமணம் என்பது வேள்விக்கிரியைகளை எடுத்துரைப்பதாகும்
- ஆரணியம் வானப்பிரஸ்தனுக்குரிய விதிகளை எடுத்துரைப்பது ஆகும். (04 புள்ளிகள்)

2) <u>வேதகால வழிபாடு :-</u>

- வேத இலக்கியங்கள் அக்காலத்தில் நிலவிய சமய நிலை பற்றி அறிய உதவுகின்றன.
- வேதகால மக்களிடையே காணப்பட்டது இயற்கை வழிபாடு ஆகும்.
- இயற்கை அம்சங்கள் நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றன.
- தெய்வங்கள் வழிபடுவோருக்கு நன்மைகளை கொடுப்பனவாகவும் பகைவர்களை அழிப்பனவாகவும் குறிப்பிடப்படுகின்றன.
- நீண்ட ஆயுளை வேண்டும் பாடல்களும் காணப்படுகின்றன.
- வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே பிற்கால சமய வளர்ச்சியின் தெய்வீக நம்பிக்கையில் பிரதான இடத்தைப் பெறுகின்றன.
- கிரியை முறையிலான வழிபாடுகள் இடம் பெற்றன. பண்டமாற்று முறை காணப்பட்டன.
- வேதங்களில் அஸ்வமேதம், கிராஜ ஆயம், வாஜபேயம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.
- வேள்வி வழிபாட்டில் புரோகிதன், அக்கினி, பவோன், சோமன் என்போர் பிரதான இடம் வகித்தார்.
- வேள்விகளின் பிரதான நோக்கம் இம்மைப் பயன்களாகும்.
- நீண்ட ஆயுள் போரில் வெற்றி, நோய் நீக்கம் முதலான உலகியல் தேவைகளை வேண்டி வேள்விகள் செயற்பட்டன.
- சவித்துரு எனும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய காயத்திரி மந்திர செபம், வீபூதி தாரணம் பற்றியும் வேதங்களில் காணலாம்.
- சுக்கில யசூர் வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையை கூறுகின்றது. உ – ம் :- சதருத்திரியம்.
- சாமவேதம் இறை வழிபாட்டிற்குரிய இசைப்பாடல்களை கொண்டுள்ளது.
- எல்லா உலகமும் எல்லா மக்களும் சமமாக வாழ்வதற்கான வேண்டுதல்களும் வேத மந்திரங்களில் உண்டு. (3 புள்ளிகள்)

3) <u>தத்துவ சிந்தனைகள்</u>

- வேத இலக்கியங்களில் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளையும் கொண்டுள்ளன.
- பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், ஜம சூக்தம், வருண சூக்தம் போன்ற பகுதிகளில் உண்டு.
- ரிக்வேத 1 : 64 : 46 வது பாடலில் "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" என்னும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாகவுள்ளது.
- இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீயம் பாடலில் இருந்து மெய்யியலில் உள்ள அத் வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.
- பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பான சிந்தனைகளும் முன்வைக்கப்படுள்ளன.
- வேதங்களின் இறுதிப் பகுதியாக அமைந்த உபநிடதத்தில் பிரமம், ஆன்மா பற்றிய சிந்தனைகள் முத்தி பற்றிய கருத்துக்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. (3 புள்ளிகள்)

03.

1) <u>பொருள் மரபு</u>

- புராணங்களில் பண்பாடு, சமயம், வரலாறு பற்றிய செய்திகள் காணப்படுகிறது.
- தெய்வீக வரலாறும், பரத்துவம் என்பன காணப்படுகின்றது.
- பஞ்சலட்சணங்கள், தச இலட்சண மரபுகள் புராணங்களில் உண்டு.
- ஆச்சிரமக் கோட்பாடு, புருடார்த்தக் கோட்பாடு பற்றிய கருத்துக்கள் இடம் பெறுகின்றன.
- தானம் விரதம் சிரார்த்தம், மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற விடயங்கள் இடம் பெற்றுள்ளன.
- வானியல் சோதிடம், மருத்துவம், அறிவியல், சிந்தனைகள் பற்றிய விடயங்கள் காணப்படுகின்றன.
- அரசியல் தர்ம நெறி கலைமரபுகள், சிற்ப இலட்சணங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. (4 புள்ளிகள்)

agaram.lk

**2) சமய நெறிகள்**

- o புராணம் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், சௌரம், கௌமாசம் ஆகிய சமய நெறிகளை எடுத்துக் கூறுகின்றன.
- o சிவபுராணம், விஸ்ணு புராணம், சூரிய புராணம் என்பன பிரம்மா, விஷ்ணு, சிவன் சூரிய வழிபாடுகின் பெருமைகளையும் மருத்துவங்களையும் கூறுகின்றன.
- o சிவபிரான் தவம் மூலமே தன்மை அடையலாம்'' எனக் கூறியதாக புராணம் கூறுகின்றது.
- o தலயாத்திரை, தீர்த்தயாத்திரை, ஆலயவழிபாடு, உருவ வழிபாடு பற்றியும் புராணங்கள் கூறுகின்றன.
- o தெய்வ வரலாறு, அற்புதங்கள், வழிபாட்டு முறைகள் அசுரர்கள், திருமால், உமைதவம் பற்றியும் புராணங்கள் கூறுகின்றன. பக்தியையும், இறை நம்பிக்கையையும் வலுப்படுத்துவனவாக புராணங்கள் காணப்படுகின்றன.
- o விரதங்கள் பற்றி அக்கினி புராணம், கணேச புராணம் விளக்கம் கூறுகின்றது.
- o தியானம், தவம் தலயாத்திரை, தீர்த்த யாத்திரை, விரதம், உருவ வழிபாடு பற்றி புராணங்கள் எடுத்தியம்புகின்றன. (3 புள்ளிகள்)

**3) தத்துவ சிந்தனைகள்.**

- முழுமுதற் கடவுள் ஆண்மா பிரபஞ்சம், தர்மவினை மறுபிறப்பு ஆன்மீக விடுதலை முதலிய விடயங்கள் தத்துவ சிந்தனையில் இடம் பெற்றன.
- இறை பரத்துவம் பிரதானமானது, சிவபுராணம் திருநீறு செய்யும் முறை தீட்சை பெறும் முறை ஆகியவற்றின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது.
- பூசை முறைகள், சிற்ப சாஸ்திர முறைகள், நோய் நீக்கக்கூடிய முறைகள் புண்ணிய நதிகள்நதிகள் நகரங்கள் பற்றிய விபரங்கள் முற்பிறப்பின் செயல்கள் மறுபிறப்பின் மறுபிறப்பில் பயன்தரும் என்ற செய்தியும் புராணங்களில் கூறுகின்றது.
- சிவபரத்துவம் விஸ்ணு பரத்துவம் முதன்மையானவை உலக உற்பத்தி பற்றிய கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றன.
- திருமாலின் உந்திக் காலத்தில் இருந்து உலகம் படைக்கப்பட்டுள்ளது எனும் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன.
- அவதார தத்துவம் தர்மம் நிலைநாட்டு நோக்குரியது. தெய்வீகக் கதைகள் தெய்வீக வடிவங்கள் தத்துவ நோக்குடையன விரதம் தீட்சை என்பன ஆன்மீக விடுதலையை நோக்கமாக உடையவை சைவ சித்தார்ந்த தத்துவம் தொடர்பானவை. (3 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி "(ஆ)"

04.

01. சைவமும் வைணவமும்

- சித்தார்ந்தசைவம், வீரசைவம், காஸ்மீரசைவம் வளர்ச்சி கண்டது.
- பசவ புராணம், வீரசைவ கோட்பாட்டை கூறுகின்றது.
- சைவ சமயத்தில் பிரபுலிங்க லீலை, விரும்பாட்சகர் கோயில் வழிபாடு பிரதான இடத்தை பெற்றது.
- வைணவத்தில், தெலுங்கு கண்ணடக மொழிபாடல்கள் எழுந்தது.
- கிருஸ்ண தேவராயர் விஸ்ணு சித்தியம் எனும் நூலை எழுதியுள்ளார்.
- அட்டத்திக்க ஐயம் எனும் நூல் பிரதானமானது.
- சைவசமய நூலான கானாத்தி மகாத்மியம் இக்காலத்தில் எழுதப்பட்டது.
- கரிகர மன்னன் சிதம்பரம், திருப்பதி, காளகஸ்தி, திருவரங்கம் ஆகிய கோயில்களுக்கு திருப்பணி செய்தார். இதன் மூலம் சைவவைணப் பணிகள் வெளிப்படுத்தப்படுகின்றது.
- வைணவம் வடகலை தென்கலை வைணவமான விரிவடைந்தது.
- திருவரங்கத்தில் மத்துவர் வேதாங்கத்தை போதித்தார்.
- அருணகிரிநாதர் பாடல்கள் எடுத்துக்காட்டாக உள்ளது.
- காணமுகர், பாசுபதர் முதலிய சைவசமய பரிவினர்களும் காணப்பட்டனர். (4 புள்ளிகள்)

**கலை மரபு**

02. விஜயநகர காலத்தில் கோயில் கலைகள் நன்கு வளர்ச்சி பெற்றன.

- நூறு தூண்கள் முதல் 1000 தூண்கள் வரை கட்டப்பட்டன.
- கிருஸ்ண தேவராயர் அமைத்த விருபாட்சகர் கோயில் விட்டலர் சுவாமி கோயில் என்பவற்றால் இராமாயணக் கதைச் சிற்பங்கள் காணப்பட்டன.
- இக்கோயில் சுற்றுப்பிரகாரங்களில் இராமயண, மகாபாரத கதை ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன.
- குதிரை மற்றும் பாழித்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- இராவணன் கதையை சித்தரிக்கும் சிற்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றது.
- விஜய நகர ஆட்சிக்காலத்தில் துலாபார விழாக்களான மண்டபங்கள் கட்டப்பட்டன.
- விஜயநகர கால ஓவியங்கள் காஞ்சிபுர, திருப்பதி, திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. (3 புள்ளிகள்)

03. மடங்கள் ஆற்றிய பணிகள்.

- இந்தியாவில் 15 மடங்கள் தொண்டு தொட்டு நிலவுகின்றன. அவற்றில் கைலாசமடம், வலசகமடம், கோவிதாரமடம், பத்ரீமடம், மந்தமடம், மாயூரகமடம், சோழகமடம் என்பனவாகும்.
- தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.
- திருமுறைகளை பண்ணோடு பாடுவித்தல்.
- சமய துண்டுப் பிரசுரங்களை வெளியிடல்.
- ஏழைகளுக்கு உதவுதல்.
- திருமுறை, வேத ஆகமங்கள் கற்பிப்போரை ஆலயசேவை புரிவோரை உருவாக்கல்.
- இயற்கை அனர்த்தத்தின் போது நோய் பரவும் போதும் உதவுதல்.
- யாத்திரைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- மக்களை சமமாக பேணி ஆன்மீகப் போதனைகளை வழங்கியமை.
- சமய பரீட்சைகளை நடாத்துதல்.
- வேத ஆகம அனுட்டானங்களை பேணுதல்.
- சமயப்பணி, சமூகப்பணி ஊடாக சமயத்தை பாதுகாப்பதற்காக தோன்றி நிறுவனங்களே மடங்கள் ஆகும். (3 புள்ளிகள்)

agaram.lk

05.

1) காணாபத்திய வழிபாட்டுடன் தோற்றமும் வளர்ச்சியும்.

- இது சண்மதங்களில் ஒன்று கணபதியை முழுமுதற்கடவுளாக கொண்டு வழிபடும் நெறியே காணாபத்தியம் ஆகும்.
- ஐதரோய பிராமணத்தில் விக்கினம் தீர்க்கும் தெய்வமாக கூறப்பட்டுள்ளது.
- தோற்றம் பற்றி கூறுமிடத்து வேததத்தில் 'கவிஞ்ஞர்களின் கவிஞன் ஞானிகளின் ஞானிகள்' சுட்டப்பட்டுள்ளது.
- வனவாசத்தில் பஞ்சபாண்டவர் சுதமுனிவரின் உபதேசத்திற்கு இணங்க விநாய சதுர்த்தி விரதம் அனுட்டிப்பதாக வரலாறு கூறுகின்றது.
- இந்திரன், மன்மதன், மெய்கண்டர், நம்பியாண்டார் நம்பி ஆகியோர் வழிபட்டு அருள் பெற்றனர்.
- முத்சல புராணம், கணேச புராணம் என்பவற்றில் விநாயகரை சிறப்பித்து கூறப்பட்டுள்ளது.
- ஆகமங்களில் கணபதி ஹோமத்திற்கு முதன்மையளிக்கப்படுகின்றது.
- கி.பி 6ம், 7ம் நூற்றாண்டு காலத்தில் தக்கணத்தில் உள்ள குகைக் கோயில்கள் சிலவற்றில் கணபதி சிலைகள் இருந்துள்ளன. அங்கு விநாயகர் சிலை சப்த மாந்தர்களோடு காணப்படுகின்றன.
- உபநிடதங்களில் ஏரம்ப உபநிடதம், கணபதி உபநிடதம் கணபதி பற்றிக் கூறுகின்றனர்.
- ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியான கணேச மகாத்மியம் கணேச புராணம் மகாகணபதி, நிர்வாண தந்திரம் ஸ்ரீலலிதாதுஹஸ்ர நாமத்தில் குறிப்புக்கள் உண்டு.

- தென்கிழக்காசிய நாடுகளான நேபாளம், இலங்கை போன்ற நாடுகளின் பண்டைக்கால குறிப்புக்களில் காணப்படுகின்றமை. பண்டைக்காலத்தில் வழிபடப்பட்டமை.
- சோழர் காலத்தில் விநாயகர் ஆலயங்கள் கட்டப்பட்டன
- நம்பியாண்டார் நம்பி, பொள்ளாப் பிள்ளையாரின் அருள் பெற்று திருவாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையைப் பாடியுள்ளார்.
- பிற்காலத்தில் எழுச்சி பெற்ற நூல்களாக கணேசபஞ்சரத்தினம் விநாயகர் அகவல், விநாயகர் கவசம், விநாயகர், மும்மணிக்கோவை என்பவற்றைக் கூறலாம். (4 புள்ளிகள்)

2) வழிபாட்டு முறை
- அக்காரியத்தை தொடங்குமுன் வழிபடப்படும் சைவமரபு சிறப்பானது.
- புத்தகங்களில் எழுதத் தொடங்கும் முன் வழிபடப்படும் சைவமரபு சிறப்பானது
- ஆலயத்திலும் இல்லங்களிலும் நடைபெறும் கிரியைகளில் முதன்மை இடம் பெறுகின்றது.
- மஞ்சள் மா, அரிசி மா, சாணம் முதலியவற்றில் உருவம் அமைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது.
- தோத்திரங்கள் மூலம் வழிபடுதல்.
- பல்வேறு நிவேதனங்களான மோதகம், வடை, அவல், கரும்பு போன்றவற்றை படைத்து வழிபடும் முறை காணப்படுகின்றது.
- விநாயகர் வழிபாட்டின் மூலம் சகல செல்வமும் பெருகும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.
- ஆகமங்களில் நைமித்திய வழிபாட்டில் மந்திரங்களுடன் கூடிய கணபதி ஹோமம் - மந்திர உபாசனை விரத அனுட்டானங்கள் காணப்படுகின்றன.
- பிள்ளையார் கதை, விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி போன்ற விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. (3 புள்ளிகள்)

3) சமுதாயச் செல்வாக்கு
- ஆலய பூசைக் கிரியைகளிலே முதல் பூசை இடம்பெறும்.
- எல்லாச் சமயத்திலும் முதல் வணக்கத்திற்குரியவர் கணபதியாவார்.
- எளிமையில் அருள் பாலிப்பவர்.
- எக்காரியத்தையும் தொடங்கும் முன் வழிபடுபவர்.
- பல விரதங்கள் அனுட்டிக்கப்படுகின்றது.
  உ – ம் (விநாயகர் சஷ்டி, விநாயகர் சதுர்த்தி)
- ஈழத்திலும் பிறநாடுகளிலும் கோயில்கள் காணப்படுகின்றது.
  உ – ம் (தென்கிழக்காசிய நாடுகள்)
- பல இலக்கியங்கள் காணப்படுகின்றது.
- இவர் நாமத்தை மக்கல் பலர் சூடிக்கொண்டுள்ளனர்.
- பௌத்த மதத்தவர் கணபதி தெய்வத்தை வழிபடல். (3 புள்ளிகள்)

06. 1) சல விக்கிரகம் - இடத்துக்கிடம் நிகர்த்தக்கூடிய விக்கிரகம்
அசல விக்கிரகம் - நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்.
சாலசல விக்கிரகம் - நகர்த்த கூடியதாக இருப்பிலும் அவ்வாறு நகர்த்த கூடாது என்னும் நோக்கில் நிறுவப்படும் வடிவங்கள். (4 புள்ளிகள்)

2)
- உலோகத்தினால் எந்த உருவை செய்ய வேண்டுமோ அந்த உருவைப் போல முதலில் மெழுகினால் செய்து கொள்வது வழக்கம்.
- மெழுகினால் ஆன வடிவத்திற்கு மேல் புற்றுமண்ணை ஒன்றுக்குமேல் ஒன்றாக மூன்று முறை பூசுதல்.
- இவ்வாறு பூசப்பட்ட மெழுகுப்பாவையை பல நாட்கள் நிழலில் உலர விடுவர்.
- பின்னர் அதனை தீயிலிடுவார்.
- உள்ளிருக்கும் மெழுகு உருகி வெளியே வந்த பின்னர் உலோகத்தை உருக்கி உள்ளே வார்ப்பதற்காக மண்ணில் ஆங்காங்கே துணைகள் இடப்படும்.
- மெழுகு உருகி வெளிய வந்ததும் மண் அச்சில் உலோகக் குழம்பை வார்ப்பார்.
- இவ்வாறு வார்தெடுக்கப்பட்ட வடிவத்தை உளி கொண்டு செம்மைப்படுத்தி நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அழகு செய்வார்.
- தமிழகம் 3000 வருடங்களுக்கு முன்பே காணப்பட்டதாக கூறப்படுகின்றது. (3 புள்ளிகள்)

3) விக்கிரக்கலையில் சண்முக வடிவமும் தத்துவமும்.

- சண்முக தரிசனத்தின் சிறப்புப் பற்றி குமர தந்திரம் கூறுகின்றது.
- தாரகாசுரனை வதம் செய்து சண்முக தரிசனம் பெறுவதை குறிக்கின்றது.
- இலங்கையில் மண்டூர் ஆலயத்தில் "சண்முக தாரகாந்தக" என்று சண்முக தரிசனம் இடம் பெறுகின்றது.
- இதற்கு சான்று திருச்செந்தூர் புராண படனமாகும்.
- பாம்பனடிகள் பாடலடிகள் (6666) சான்று.

தத்துவம்

- பன்னிருதோளும் 12 உயிர் எழுத்துக்களைக் குறிக்கும்.
- வேல் - ஞானசக்தி
- திருமுருகாற்றுப் படையில் பன்னிரு கைதத்துவம்.
- 1ம் கைதத்துவம் - முனிவர்களைத் தாங்கியது.
- 2ம் கைதத்துவம் - இடுப்பில் பொருத்தியதியமை.
- 3ம் கைதத்துவம் - தொடைமீது வைத்திருத்தல்.
- 4ம் கைதத்துவம் - அங்குசம் பிடித்தல்.
- 5ம் கைதத்துவம் - வேலாயுதம்.
- 6ம் கைதத்துவம் - கேடயம் ஏந்தியமை.
- 7ம் கைதத்துவம் - மேல் உயர்ந்தியமை.
- 8ம் கைதத்துவம் - மணிஒலிக்கும் கை
- 9ம் கைதத்துவம் - மழை கொடுக்கும் கை
- 10ம் கைதத்துவம் - பெண்களுக்கு மாலைசூட்டி அருளும் கை. (3 புள்ளிகள்)

07. 1) திருமூலரின் தோற்றம்.

- இவர் கி.பி 3ம் நூற்றாண்டுக்கும் 6ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாக கருதப்படுகின்றது.
- திருக்கைலாச மரபில் வந்தவர், இம்மரபினை சிவமரபு, நந்தி மரபு, நாதன் மரபு என அழைப்பர்.
- திருநந்திதேவரிடம் சிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர்.
- இளமைத் திருநாமத்தை சுந்தர நாதன் எனக் கொண்டவர், இடையன்.
- மூலனின் இறந்த உடலுள் கூடுவிட்டும் புகுந்து திருமூலராக விளங்கியவர்.
- திருவாவடுதுறையில் யோக நிஸ்டையில் ஆழ்ந்தவர்.
- தமிழ் நாட்டில் உதித்த சித்தர்களில் தலைமைச் சித்தராக கருத்தப்படுகின்றார் சித்தர் பரம்பரையின் வித்து எனப் போற்றப்படுகிறார். (4 புள்ளிகள்)

2) திருமந்திர நூலின் உள்பொருள்

- அது யோக சாதனநூல், மந்திர சாத்திரம், தந்திர சாத்திரம் என போற்றப்படும்.
- தர்மசாத்திரமாகவும் விளங்கும் சிறப்பு உடையது.
- சைவத்தின் முடிந்த முடிபான சித்தாந்தக் கொள்கை பற்றி முதன்முதலில் குறிப்பிட்ட திருநூல்.
- அண்டவியல், வானியல், கணிதவியல் உள்ளிட்ட இந்துக்களின் பௌதிக அறிவியல் பற்றிய குறிப்புக்கள் செறிந்துள்ளன.
- உயிர் வர்க்கங்களின் தோற்றம், நோய்கள், சிகிச்சை உள்ளிட்ட உயிரியல், மருத்துவ சிந்தனைகளைக் கொண்ட சிறப்புநூல்.
- ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறும் நூல் அனுபவ ஞானத்தின் திருநூல்.
- சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கலைக்களஞ்சியம்.

(3 புள்ளிகள்)

3) சிவவாக்கியரின் போதனைகள்.

- இவரது போதனைகள் புரட்சிகரமானவை.
- சிவனை பரம்பொருளாக கொண்டே போதனைகளை முன்வைத்தார்.
- ஒரே பரம்பொருள் வெவ்வேறு வடிவங்களாக விளங்குகின்றது எனப் பாடியுள்ளார்.

agaram.lk

- இவரது போதனைகளில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் உள்ளமே கோயில் ஆன்ம அனுபவமே பரமமுத்தி என்பனவே இவர் கூறும் வார்த்தைகள் ஆகும்.
- சமய சன்மார்க்க நெறிகளைப் பரப்பியவர் இறைவனை பூசை முதலான புறச்சடங்குகளால் காணமுடியாது என்பதனாலேயே "கோயிலாவது ஏதடா, குளங்களாவது ஏதடா" எனப்பாடியுள்ளார்.
- கடவுளை உணரவேண்டும் வீடுபேற்றை அடைய வேண்டும், நமச்சிவாய மந்திரமே முத்திக்கு வழி என போதித்துள்ளார். *(3 புள்ளிகள்)*

*08.* சுந்தரமூர்த்தி நாயனாரின் பங்களிப்பு.

*1.* தேவார முதலிகளில் ஒருவர்.

வாழ்ந்த காலம் - கி.பி 694 – கி.பி 712 வரை

வாழ்ந்த இடம் - திருமுனைப்பாண்டி நாட்டிலே திருநாவலூரிலே

தாய் - இசைஞானியார்.

தந்தை – சடையனார்.

இளமைப்பெயர் - நம்பியார் ஊரர்

நின்றநெறி – சகமார்க்கம்.

முத்தி – சலோபமுத்தி

பாடிய பாடல் - திருத்தொண்டர் தொகை, நாட்டுத்தொகை, ஊர்த்தொகை

இவர் பாடிய தேவாரங்களில் கிடைக்கப் பெற்றது – 1026

முத்தி – 18 வயதில் ஆடிச்சுவாதி அன்று

சமூகப் பணி – முதலை விழுங்கிய பாலகளை மீட்டமை.
நண்பன் கலிக்காமருக்காக தனது உயிரை தியாகம் செய்தமை.
இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சிறப்பிற்குரியவர்.

இவருக்காக இறைவன் செய்த அற்புதம்.
குண்டையூர்கிழார் நெல் பெற்றமை.
செங்கற்கள் பொன்கட்டிகளானமை.
சிவபெருமான் சுந்தரருக்கு வழிகாட்டியமை.
ஆற்றிலிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமை.
சிவபெருமான் தண்ணீர் பந்தலும் பொதிச்சோறும் அருளியமை.
சுந்தரர் கண்பார்வை பெற்றமை
சிவபெருமான் பரவையாரிடம் தூது சென்றமை.
காவிரி ஆறு பிரிந்து வழிவிட்டமை.
முதலையுண்ட பாலகளை மீட்டமை.
சுந்தரர் திருக்கயிலையை அடைந்தமை.
தத்துவ வளர்ச்சியில் இவரின் பங்களிப்பு என்பனவாகும். *(10 புள்ளிகள்)*

agaram.lk